Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (40-46)

# Analyzing form two students writing skills using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart

# ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் வழி இரண்டாம் படிவம் மாணவர்களின் எழுத்துத் திறன் அடைவுநிலையைக் கண்டறிதல்

**Saranya Raghu**

Faculty of Languages and Communication,
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

email: kaaminy@fbk.upsi.edu.my

**Published:** 25 April 2024

**To cite this article (APA):** `எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் வழி இரண்டாம் படிவம் மாணவர்களின் எழுத்துத் திறன் அடைவுநிலையைக் கண்டறிதல்: Analyzing form two students writing skills using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart. (2024). *Journal of Valartamil*, *5*(1), 40-46. https://doi.org/10.37134/jvt.vol5.1.6.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.1.6.2024

**Abstract:** This study analyzes the writing skills of Form Two students using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart. Form two students who have chosen Tamil as an elective subject at a secondary school in the Jasin district of Malacca. A qualitative approach is employed, utilizing research instruments such as pre-tests, instructional interventions, post-tests, and feedback questionnaires. The findings aim to determine the form two students writing skill before training using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart. The researcher determines the form two students writing skill after training using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart. This study will insight the impact of form two students writing skill of following training using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart. This study will be conducted among three Form 2 students who have chosen Tamil as an elective subject in a secondary school in the Jasin district of Malacca state. The study will follow a qualitative approach. The research tools used in this study include a pre-test, a questionnaire, instruction, and a post-test. The outcome of the study will be to determine the writing skills of Form Two students using ‘Cognitive Process of Writing’ theory-based flowchart.

**Key words:** Writing skills, Cognitive Writing Processes, Flow chart

## முன்னுரை

இந்த ஆய்வானது இரண்டாம் படிவ மாணவர்களின் எழுத்துத் திறன் அடைவுநிலையை 'எழுதும் அறிவுசார் செயல்முறைகள்' கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொங்கு வரைப்படம் (Flowchart) வழி கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆய்வுப் பின்னணி

கேட்டல், பேச்சு, எழுத்து, வாசிப்பு எனும் மொழித் திறன்களில் எழுத்துத் திறனானது மிகவும் முக்கியமான திறனாக அமைக்கின்றது (Norfazirah, Abd Raub, Nik Farhan dan Mohd Sukki 2019). எழுத்துத் திறன்வழி மாணவர்கள் ஏடல்கள், கருத்துக்கோடல்கள், தாங்கள் பெற்ற அனுபவங்கள், கற்றலின் வாயிலாகப் பெற்ற அறிவுப்புலம் ஆகியவற்றை வெளியிடுவர் (தேசியக் கலைத்திட்டம், 2016). அதனால்தான், எழுத்துத் திறனில் தொகுத்து எழுதுதல், கட்டுரை போன்ற பகுதிகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. கொடுக்கப்பட்ட தலைப்பிற்கு ஏற்ற கருத்துகளைத் திட்டமிட்டு, அதனைக் கோர்வைப்படுத்தி எழுதுவது சொற்பெருக்கே கட்டுரையாகும் (சோவினா பிரியா, 2017).

இன்றைய நிலையில் இடைநிலைப்பள்ளிகளில் பயன்படுத்தும் தேசியக் கலைத்திட்டத்தின் எழுத்துத்திறனின் நான்கு உள்ளடக்கம் தரங்களை உள்ளடகியுள்ளது. அவை. 3.1 வாக்கியம் அமைப்பர், 3.2 பத்தி அமைப்பு முறைகளை அறிந்து எழுதுவர், 3.3 தொகுத்து எழுதுவர், 3.4 பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைப்பர் ஆகும். இந்த ஆய்வு 3.3 தொகுத்து எழுதுவர் என்ற உள்ளடக்கத்தரத்தை வைத்து எழுதப்படும்.

கொடுக்கப்பட்ட கருத்துகளைத் தொகுத்து எழுதுவது ஒரு முக்கியமான உள்ளடக்கத் தரமாக மாணவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், மாணவர்கள் குறிப்பிட்ட சொற்களுக்குள் கொடுக்கப்பட்ட கருத்துகளைத் தகுந்த விளக்கம், எடுத்துக்காட்டுகள், விளைவு போன்றவற்றை அடைப்படையாக வைத்து முக்கியக் கருத்துகளைத் தொகுத்து எழுத வேண்டும். இவ்வரிசையில் முக்கிய கருத்துகள் எனப்படுவது மாணவர்கள் தெரிநிலை, புதைநிலைக் கருத்துகளைச் சரியாக அடையாளம் கண்டு குறிப்பிட்ட சொற்களில் குறுகியப் பத்தியில் எழுத வேண்டும். மாணவர்கள் தெரிநிலை, புதைநிலைக் கருத்துகளைத் திட்டமிட்டு, ஒவ்வொரு கருத்துகளை வரிசையாகவும் கோவையாகயும் எழுதி அதனை மீண்டும் சரிப்பார்ப்பது சிறப்பாகும்.

'எழுதும் அறிவுசார் செயல்முறைகள்' கோட்பாடு எனப்படுவது ஒரு கருத்தை எவ்வாறு முறையாக விவரித்து எழுதுவது என்ற குறிப்புகளை உள்ளடக்கியுள்ளது. அதாவது, மாணவர்கள் முதலில் கருத்துகளை யோசித்து திட்டமிட்டு அதனைச் சட்டகமாக அமைத்து, பின் சட்டகத்திலிருக்கும் கருத்துகளை வாக்கியங்களாக எழுதி, இறுதியாக மாணவர்களே அவர்கள் எழுதியக் கருத்துகளைச் சரிப்பார்ப்பர். இதனால், மாணவர்கள் எழுதும் கருத்துகளின் நோக்கத்தை அடைய உதவுகின்றது. இம்முறைகளை மையமாகக் கொண்டு மாணவர்கள் கருத்துகளை எளிமையாகக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க இயலும்.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டு ஆராயப்படும். அவை:-

I. ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் பயிற்றுவித்தலுக்கு முன் இரண்டாம் படிவம் மாணவர்களின் எழுத்துத் திறனின் அடைவுநிலையைக் கண்டறிதல்.
II. ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் பயிற்றுவித்தலுக்கு பின் இரண்டாம் படிவம் மாணவர்களின் எழுத்துத் திறனின் அடைவுநிலையைக் கண்டறிதல்.
III. ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் பயிற்றுவித்தல் தொடர்பாக இரண்டாம் படிவம் மாணவர்களின் கண்ணோட்டத்தைக் கண்டறிதல்.

**ஆய்வு கருவி**

ஆய்வாளர் நிரலொழுங்கு வரைப்படம் (**Flowchart)** ஒரு ஆய்வுக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார். இந்த நிரலொழுங்கு வரைப்படமானது ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ (Cognitive Process of Writing) கோட்பாடு அடிப்படையிலிருந்து அமலாக்கம் செய்து உருவக்கப்பட்டது. அமலாக்கம் செய்யப்பட்ட நிரலொழுங்கு வரைப்படத்தில் மூன்று படிநிலைகளை உள்ளடக்கியுள்ளது. முதலாம் படிநிலை திட்டமிடுதல், இரண்டாம் படிநிலை மொழிபெயர்த்தல், மூன்றாம் படிநிலையில் மதிப்பிடுதல் எனும் இந்த நிரலொழுங்கு வரைப்படம் வடிவமைக்கப்பட்டது. இக்கருவியின் பெயர் அமலாக்கம் செய்யப்பட்ட ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ நிரலொழுங்கு வரைப்படம் (M**odified vision “Cognitive Process of Writing” Flowchart)** ஆகும்.

**வினா**


**வினா 1:** எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் பயிற்றுவித்தலுக்கு முன் இரண்டாம் படிவம் மாணவர்களின் எழுத்துத் திறனின் அடைவுநிலையை எவ்வாறு கண்டறிவது?

இவ்வாய்வின் முதல் நோக்கமானது ‘எழுதும் அறிவுசார் செயல்முறைகள்’ கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் பயிற்றுவித்தலின் முன் இரண்டாம் படிவம் மாணவர்களின் தொகுத்து எழுதும் திறன் அடைவுநிலையைக் கண்டறிதல் என்பதாகும். முன்னறித் தேர்வு வழி ஆய்வாளர் இந்நோக்கத்தின் தரவுகளைச் சேகரித்த்துள்ளார். ஆய்வுக்கு உட்ப்படுத்தப்பட்ட மூன்று மாணவர்கள் கொடுக்கப்பட்ட நிரலொழுங்கு வரைப்படத்தின் துணையுடன் தொகுத்து எழுதும் பயிற்சியைச் செய்தனர். முன்னறித் தேர்விலிருந்து கிடைக்கபெற்ற தரவுகள் அனைத்தும் பண்புசார் முறையில் விளக்கப்பட்டுள்ளது.

**முன்னறித் தேர்வு**

| **கூறுகள்** | **வர்ணம்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| முன்னுரை<br>• தலைப்பு<br>• ஆண்டு | மஞ்சள் | 2 புள்ளி |
| கருத்துகள்<br>தெரிநிலை கருத்து<br>• 1 அல்லது 2 கருத்துகள்<br>• எடுத்துக்காட்டு<br>(1அதிகமான எண்ணிக்கை,குறைவான எண்ணிக்கை) | கருத்து<br>நிலம்<br><br>எடுத்துக்காட்டு<br>சிவப்பு | 3 புள்ளி |
| புதைநிலை கருத்து<br>• 1 அல்லது 2 கருத்துகள்<br>• எடுத்துக்காட்டு/விளைவு/<br>காரணம் | கருத்து<br>பச்சை<br><br>எடுத்துக்காட்டு/விளைவு/காரணம்<br>கருப்பு | 3 புள்ளி |
| முடிவுரை | உதா | 2 புள்ளி |
| மொழி | | 5 புள்ளி |
| **மொத்தம்** | | 15 புள்ளி |

**மாணவர் 1**



இந்த குறிவரைவு 2011 முதல் 2016 வரை மலேசியத் தமிழ்ப்பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.


இக்குறிவரைவில் 2011, 2012, 2013, 2014 ஆண்டில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 523 மாணவர்கள் ஆகும். ஆனால், குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை 102642 இருந்து 92689 வரை குறைந்தது.

மாணவர்களுக்கு தமிழ்ப்பாடம் படிப்பதில் ஆர்வம் குறைந்து வருகின்றது. மேலும், பெற்றோர்கள் பிள்ளைகளை தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பவதில்லை

அனைவரும் ஒன்றிணைந்து தமிழை வாழ வைக்க வேண்டும். அதற்கு, பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்குப் பதிவுச்செய்ய வேண்டும்.

மஞ்சள் நிறத்தில் கோடிட்ட முதல் பத்தியானது முன்னுரையாகும். மாணவர் 1, முன்னுரையில் தலைப்பு, ஆண்டு போன்ற கூறுகளைச் சரியாக விளக்கி அறிமுகம் செய்துள்ளார். நில நிறத்தில் கோடிட்ட இரண்டாம் பத்தியானது தெரிநிலைக் கருத்தாகும். இம்மாணவர் இரண்டாம் பத்தி தொகுத்து எழுதும் கூறுகளின் சில பிழைகள் செய்துள்ளார். தெரிநிலைக் கருத்தில் ஒரு அதிகமான எண்ணிகையும் ஒரு குறைவான எண்ணிகையும் குறிபிடவில்லை. அதற்கு மாறாக, தெரிநிலைக்கருத்தாக அனைத்து ஆண்டின் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கைகளை விவரித்துள்ளார். மேலும், தெரிநிலைக்கருத்தில் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டுள்ளார். பச்சை நிறத்தில் கோடிட்ட மூன்றாம் பத்தியானது புதைநிலைகருத்தாகும். இப்பத்தியில் புதைநிலைக்கருத்துகளையும் அல்லது வழிமுறைகளையும் தகுந்த எடுத்துக்காட்டு, விளைவு, காரணம் போன்றவற்றை விவரிக்கவில்லை. இதனால், புதைநிலைக்கருத்துகள் தெளிவில்லாமல் காணப்படுகின்றது. உதா நிறத்தில் கோடிட்ட நான்காம் பத்தியானது முடிவுரையாகும். இப்பத்தியில் மாணவர் 1 பரிந்துரையுடன் முடிவரையை எழுதியுள்ளார். இம்மாணவருக்கு முன்னுரை 2 புள்ளியும், தெரிநிலைக்கருத்து 1 புள்ளியும், புதைநிலைக்கருத்து 1 புள்ளியும், முடிவுரை 2 புள்ளியும் வழங்கப்பட்டது. மாணவர் 1 மொத்தம் 6 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

**மாணவர் 2**



குறிவரைவு 2011 முதல் 2016 வரை மலேசியத் தமிழ்ப்பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

2011 ஆண்டில் 523 தமிழ்ப்பள்ளிகளில் மொத்தம் 102642 மாணவர்கள் படித்தனர். அடுத்து, 2012 ஆண்டில் 523 தமிழ்ப்பள்ளிகளில் மொத்தம் 96602 மாணவர்கள் படித்தனர். 2013 ஆண்டில் 523 தமிழ்ப்பள்ளிகளில் 93969 மாணவர்கள் படித்தனர். 2014 ஆண்டில் 523 தமிழ்ப்பள்ளிகளில் 92689 மாணவர்கள் படித்தனர். தொடர்ந்து, 2015 ஆண்டில் 524 தமிழ்ப்பள்ளிகளில் 90258 மாணவர்கள் படித்தனர். 2016 ஆண்டில் 524 தமிழ்ப்பள்ளிகளில் 88482 மாணவர்கள் படித்தனர்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தமிழ்ப்பள்ளியில் படிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாணவர் 2 மூன்று பத்திகளில் தொகுத்து எழுதியுள்ளார். மஞ்சள் நிற கோடு முன்னுரையைக் குறிக்கின்றது. மாணவர் 2, முதல் பத்தியான முன்னுரையில் தலைப்பு, ஆண்டு போன்ற கூறுகளைச் சரியாக விளக்கியுள்ளார். இரண்டாம் பத்தியில் நில நிற கோடுத் தெரிநிலைக் கருத்தைக் குறிக்கின்றது. இரண்டாம் பத்தியில் தெரிநிலைக் கருத்துகளைத் தொகுத்து எழுதும் கூறுகளின் சில பிழைகள் காணப்படுக்கின்றன. இரண்டாம் பத்தியில் 2011 முதல் 2016 வரை மலேசியத் தமிழ்ப்பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அனைத்தையும் குறிப்பிட்டுள்ளார். தெரிநிலைக் கருத்தில் தகுந்த எடுத்துக்காட்டுகளும் இல்லை. இம்மாணவர் புதைநிலைக்கருத்தை எழுதவில்லை. இறுதிப் பத்தியில் உதா நிற கோடு முடிவுரையைக் குறிக்கின்றது. இறுதியில் மாணவர் 2 எழுதிய முடிவுரை விளக்கம் குறைவாக உள்ளது. இம்மாணவருக்கு முன்னுரை 2 புள்ளியும், தெரிநிலைக்கருத்து 1 புள்ளியும், முடிவுரை 1 புள்ளியும் வழங்கப்பட்டது. மாணவர் 2 மொத்தம் 4 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

## முடிவு

இந்த ஆய்வு 'எழுதும் அறிவுசார் செயல்முறைகள்' கோட்பாட்டின் துணைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிரலொழுங்கு வரைப்படம் வழி பயிற்றுவித்தலின் இரண்டாம் படிவம் மாணவர்களின் தொகுத்து எழுதும் திறனின் அடைவுநிலையைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டது. மேலும், 'எழுதும் அறிவுசார் செயல்முறைகள்' கோட்பாடுச் சார்ந்த ஆய்வுகள் மிக குறைவாக உள்ளது. எனவே, பிற்காலத்தில் எழுத்து திறன் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளவிற்கும் ஆய்வாளர்கள் இந்த எழுதும் அறிவுசார்ச் செயல்முறைகள் கோட்ப்பட்டைப் பயன்படுத்தி எழுத்து திறனின் அடைவுநிலையை மேம்படுத்தலாம். மேலும், சிந்தனை வரைப்படங்களை

ஆசிரியர்கள் கட்டுரைக் கற்றல் கற்பித்தல் நேரத்தில் பயன்படுத்த வேண்டும். சிந்தனை வரைப்படங்கள் பயன்படுத்தினால் மாணவர்கள் கட்டுரையை எளிமையாகவும் சுலபமாகவும் கற்றுக்கொள்வர். இதற்குச் சான்றாக, க்வான் ஹோர் யான் (2022), சிந்தனை வரைப்படங்கள் பயன்படுத்துவது மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனின் அடைவுநிலையை மேம்படுத்துவதில் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டறியப்பட்டது என குறிப்பிட்டுள்ளார்.

## REFERENCES

ANTHONY ALOYSIUS AKUP, & YAHYA OTHMAN. (2017). KEBERKESANAN PETA PEMIKIRAN DALAM MENINGKATKAN KEMAHIRAN MENULIS ESEI BAHASA MELAYU DALAM KALANGAN PELAJAR TINGKATAN 6. *Jurnal Pendidikan Bahasa Melayu*, *7*, 44-55. https://journalarticle.ukm.my/10412/1/131-252-1-SM.pdf

Chitra Selvi Rudrapathy, Thulasi Rudrapathy, & Maniyarasan Muniandy. (2022). எழுத்துத் திறன் ஆயத்தநிலை-ஓர் ஆய்வு. *Journal of Valartamil*, *1*, 50-64. https://doi.org/10.37134/jvt.vol3.1.4.2022